பி. அண்டு சி மில் பற்றி இந்த சர்க்கார் எவ்வளவு செய்ய வேண்டுமோ அதைச் செய்திருக்கிறது. அதை புரட்சித் தலைவர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், கோயம்புத்தூரில் பல மில்களில் பணிபுரியும் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தபோது, அவர்களுக்கு உதவுவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தொழிலாளிகளுக்கு எல்லோரும் ஒரு நாள் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது மாதிரி ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்து, பெயர்பெற்ற அந்த பி அண்டு சி மில்லைத் திறந்து, அந்தத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற இந்த அரசு பாடுபடும், பாடுபட்டுக் கொண்டிருக்கிறது அதற்கு மத்திய அரசு உதவவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இந்த கவர்னர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு வழிமொழியும் வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்தால், இந்த அரசு அந்த தொழிற்சாலையை மீண்டும் திறக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

[பிற்பகல் 1.20]

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

உ. பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று (28-1-1981) முற்பகல் சுமார் 11-50 மணிக்கு. காவலை மீறி பார்வையாளர் மாடத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசிய சென்னை வேப்பேரி, தானாத் தெருவில் 20 ஆம் எண் வீட்டிலிருக்கும் திரு அப்துல் லத்திப்பின் மகன் சிந்தா சாஹுல் அமீது என்று சொல்லிக் கொள்ளும் நபர் தற்போது பேரவைக் காவலரின் (சார்செண்ட்) காவலில் இருக்கிறார். அவர் செய்கை அவை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.